மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 112/2022

பெயர் : சேரலாதன்
சாட்சி – வா.சா–2 நாள்: 17.04.2026

---

**குறுக்கு விசாரணை (1, 2 பிரதிவாதிகள் தரப்பு)**

1. வாதி குடும்பத்தாரை எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் 1ம் வாதி எனது அக்கா ஆவார். எனது அக்காவிற்கு எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என்று எனக்கு நினைவில் இல்லை. எனது சகோதரியின் கணவர் கோவை அரசு மருத்துவக்கல்லூரியில் எவ்வளவு காலம் போதகராக பணியாற்றினார் என்றால் சுமார் 20 முதல் 30 ஆண்டுகள் பணியாற்றியிருப்பார்.

2. எனது சகோதரியின் கணவர் காரணம்பேட்டையில் என்ன பெயரில் கிளீனிக் நடத்தினார் என்று எனக்கு தெரியாது. அவர் 03.03.2022 தேதியில் காலமானார். எனக்கு இந்த வழக்கு பற்றிய விவரம் எதுவும் தெரியாது என்றும், வாதிகள் சொல்லி கொடுத்ததால் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை ( 3ம் பிரதிவாதி தரப்பு)**

1. என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கினை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதி ரேணுபிரகாஷ் ஆகிய மூவரும் காலம் சென்ற பழனியப்பன் என்பவரின் வாரிசுகள் என்று விளம்புகை செய்வதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதி ரேணுபிரகாஷ் ஆகிய மூவரும் காலம் சென்ற பழனியப்பன் என்பவரின் வாரிசுகள் என்று பல்லடம் வட்டாட்சியர் வாரிசு சான்றிதழ் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எங்களுக்கு கொடுக்கவில்லை. 3ம் பிரதிவாதிக்கு கொடுத்துள்ளார் என்று தெரிந்து கொண்டோம்.

2. வாதிகள் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்களோ அதனை ஏற்கனவே பல்லடம் வட்டாட்சியர் வாரிசு சான்றிதழாக வழங்கி உள்ளார் என்பதை இந்த வழக்கு பயனற்ற ஒன்றாகவிட்டது என்றும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

3. 3ம் பிரதிவாதியின் தாயார் லில்லிபிலோமினா என்பவர் பழனியப்பனை சட்டப்படி திருமணம் செய்து கொண்டு அவர்களுக்கு முறைப்படி பிறந்த மகன் தான் 3ம் பிரதிவாதி என்றால் சரியல்ல. பழனியப்பனுக்கும் 1ம் வாதிக்கும் விவாகரத்தே நடைபெறவில்லை. எனவே, 3ம் பிரதிவாதி முறையற்ற மணப்பிறப்பில் பிறந்த மகனாவார். 3ம் பிரதிவாதி பழனியப்பனின் சட்டப்படியான வாரிசு தான் என்று பல்லடம் வட்டாட்சியர் வாரிசு சான்றிதழ் வழங்கியுள்ளர் என்றால் சரியல்ல.

4. 3ம் பிரதிவாதி மற்றும் அவரது தாயார் ஆகியோரது நன் மதிப்பை குறைக்க வேண்டும் என்பதற்காக பொய்யான சங்கதிகளுடன் 3ம் பிரதிவாதி முறையற்ற மணப்பிறப்பில் பிறந்த மகன் என்று இந்த வழக்கை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 1ம் வாதி எனது சகோதரி என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

(sd/– V.Kalidasan)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பல்லடம்.